**கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமையின் தயார்நிலைக்கான மேலதிக நிதியளிப்பு செயற்திட்டம் - 2022**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமையின் தயார்நிலைக்கான மேலதிக நிதியளிப்பு செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2020 யூலை 23 ஆம் திகதிய 67270 எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 5.01 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய சமூர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. தொற்றுநோய்களின் போது காத்திருப்புப் பட்டியலில் விண்ணப்பதாரர்களைச் சேர்ப்பதன் மூலமும்/ அல்லது தற்போதுள்ள காசு பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தொற்றுநோய்களின் போது அதிகரித்த தொகையை வழங்குவதன் மூலமும் ஊனமுற்றோர் மற்றும் நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட முதியோர்களுக்கு தற்போதுள்ள காசு பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் காசுப் பரிமாற்றங்களை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,803.87 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 41.09 மில்லியனானதுடன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தி 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உலக வங்கி/ ஐடிஏ ஐ.அ.டொலர் கடன் மீதி அத் திகதியின் LKR பெறுமதிக்கு நாணயமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை, இதன் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள கடன் மீதி மற்றும் அபிவிருத்தி செலவின மீதி என்பன குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 8,779 மில்லியன் | திறைசேரியில் பேணப்படும் கணக்கிற்கு செலவினத்தை மீள்நிரப்பு செய்வதற்காக, ”வாடிக்கையாளர் இணைப்பு” (இணைய அடிப்படையிலான கொடுப்பனவு பொறிமுறை) மூலம் உலக வங்கிக்கு உரித்தான செலவினங்களுக்கான மீளப்பெறல் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதே இந்த அமைச்சின் பொறுப்பாகும்.<br><br>நாணமாற்று சமநிலை சீராக்கங்களை கணக்கீடு செய்யாததற்கான காரணங்கள் சுகாதார அமைச்சிலுள்ள செயற்திட்ட அலுவலகம் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடமிருந்து தெளிவுபடுத்தப்பட வேண்டும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாண இல. 626 | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது செயற்திட்டமானது கணக்குகள், ஆவணங்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகளின் தனி புத்தகங்களை வைத்திருக்க வேண்டும், ஆனால் அவ்வாறு செய்யாததால், அது தொடர்பான ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியவில்லை. | இந்த அமைச்சின் செலவினக் குறியீடு 171-02-07-04-1501 இன் கீழ் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தி மாவட்ட செயலகங்கள் ஊடாக பிரதேச செயலக மட்டத்தில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள பயனாளிகள் மற்றும் வழக்கமான பயனாளிகளுக்கு சிறுநீரக படிகள் சாதாரண நடைமுறைகளை பின்பற்றி செலுத்தப்பட்டிருந்ததன் காரணமாக இந்த செயற்திட்டங்களின் கணக்குகளுக்கான தனி புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களை பின்பற்றி, தொடர்புடைய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை வைத்திருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பொது திறைசேரியால் பேணப்படும் கணக்குகளில் உலக வங்கியால் ஒன்லைனில் அமுல்ப்படுத்தப்படும் ”வாடிக்கையாளர் இணைப்பு” முறையின் மூலம் உரிமைகோருபவர்களுக்கு ஏற்பட்ட செலவினங்களை மீள்நிரப்புச் செய்வதற்கான செலவினங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது மாத்திரமே செயற்திட்டம் தொடர்பான அமைச்சின் பொறுப்பாகும். | |
| (ஆ) | (i) | 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க பொதுக் கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கையின் 5.6.15 ஆம் பந்தி | கணக்கீட்டு உத்தியோகத்தர்கள்/ பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் செயற்திட்டச் செலவினங்களின் ஒட்டுமொத்தச் செலவினங்களைக் காட்டும் மாதாந்த அறிக்கையைத் தயாரிக்க வேண்டும், இதில் மீள்நிரப்புச் செய்யப்படக்கூடிய வெளிநாட்டு உதவிச் செலவினங்கள் உள்ளடங்குகின்றன. மேலும் பெறப்பட்ட மீள்நிரப்பல்கள் பொதுக் கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும், ஆனால் இது மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்படவில்லை. | பொதுத் திறைசேரியால் பேணப்படும் கணக்குகளுக்கு உலக வங்கியால் ஒன்லைனில் அமுல்ப்படுத்தப்படும் ”வாடிக்கையாளர் இணைப்பு” முறையின் மூலம் உரிமைகோருபவர்களுக்கு செலவிட்ட செலவினங்களை மீள்நிரப்புச் செய்வதற்கான செலவினங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது மாத்திரமே செயற்திட்டம் தொடர்பான அமைச்சின் பொறுப்பாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த அறிக்கைகளைத் தயாரிப்பது சுகாதார அமைச்சு/ பொது திறைசேரியின் செயற்திட்ட அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. | தொடர்புடைய சுற்றறிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். |
| | (ii) | 5.6.16 ஆம் பந்தி | கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மீள்நிரப்புச் செய்யக்கூடிய வெளிநாட்டு உதவி ஈடுபடுத்தல், செலவின உரிமைக் கோரிக்கைகள் மற்றும் மீள்நிரப்பல்களின் பெறுவனவு ஆகியவற்றை கண்டிப்பாக கண்காணிக்க வேண்டும், ஆனால் | பொது திறைசேரியால் பேணப்படும் கணக்குகளுக்கு உலக வங்கியால் ஒன்லைனில் அமுல்ப்படுத்தப்பட்ட ”வாடிக்கையாளர் இணைப்பு” முறையின் மூலம் உரிமைகோருபவர்களுக்கு ஏற்பட்ட செலவினங்களை மீள்நிரப்பு செய்வதற்கான செலவினங்களின் | தொடர்புடைய சுற்றறிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். |

| | |
|---|---|
| அவ்வாறு செய்ததை அவதானிக்க முடியவில்லை. மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட விண்ணப்பங்கள் 2022 ஏப்ரல் 18 மற்றும் யூன் 01 இல் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும் 2021 யூன் முதல் திசெம்பர் வரை செயற்திட்டங்கள் செலவிட்ட ரூபா 415.47 மில்லியன் 2022 சனவரி 27 மற்றும் மார்ச் 3 இல் சமர்ப்பிக்கப்பட்டது. | விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது மாத்திரமே செயற்திட்டம் தொடர்பான அமைச்சின் பொறுப்பாகும்.<br><br>2021 யூன் முதல் திசெம்பர் வரை செலவிடப்பட்ட ரூபா 415.47 மில்லியன் தொகை தொடர்பான மீள்நிரப்பு விண்ணப்பங்கள், 2021 யூன் முதல் திசெம்பர் வரையிலான் காலப்பகுதியின் போது கொவிட்-19 பரவியதால் ஏற்பட்ட நிலைமைகள் காரணமாக அறிக்கைகளைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டதால், 2022 சனவரி 27 மற்றும் மார்ச் 03 இல் சமர்ப்பிக்கப்பட இருந்தது. |

**3.1 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான 4 மாத காலப்பகுதியில் 25 மாவட்டங்களில் காத்திருப்போர் பட்டியலில் இருந்த சிறுநீரக நோயாளிகளுக்கு இச் செயற்திட்டத்தின் மூலம் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்ட ரூபா 5000 நிதியுதவி வழங்கப்பட்டதற்கான ஆவண சான்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வழக்கமான பயனாளிகள் மற்றும் காத்திருப்புப் பட்டியலில் உள்ள பயனாளிகளுக்கு செலுத்துவதற்காக ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தால் வழங்கப்பட்ட பட்டியல்களின் அடிப்படையில் வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் மாவட்டச் செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டது. அந்த படிகளுக்கான கொடுப்பனவுகளைச் செய்த பின்னர், திறைசேரி அச்சீட்டுத் தாளள்களிற்கு இணங்க மாவட்ட மட்டத்தில் சுருக்கமான செலவின அறிக்கைகள் கணக்குப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு அந்த படி தொடர்பான ஆவணங்கள் அமைச்சினால் பேணப்படுகின்றன. இந்த செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு நிதி இந்த அமைச்சிற்கு கிடைக்காததால், வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்குகள் பேணப்படவில்லை. | ஆவணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் உலக வங்கி குழு நடாத்திய அரையாண்டு மீளாய்வுக் கூட்டத்தின் அறிக்கையின் பிரகாரம் 2022 ஏப்ரல் வரை காத்திருப்புப் பட்டியலில் உள்ள சிறுநீரக நோயாளர்களுக்கு உதவி வழங்குவதற்கு 2020 செப்தெம்பரில் அமைச்சரவை தீர்மானித்ததிருந்தென குறிப்பிடப்பட்ட போதிலும் குறித்த அமைச்சரவை தீர்மானம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>எனினும், தெரிவு செய்யப்பட்ட பதினொரு மாவட்டங்களில் உள்ள எண்பத்தி இரண்டு பிரதேச செயலகங்களில் உள்ள சிறுநீரக நோயாளர்கள் இந்த படியை பெற்றுக் கொண்டனர். ஆனால் 2020 ஆம் ஆண்டுக்கு மாத்திரம் நாடளாவிய ரீதியில் உள்ள சிறுநீரக நோயாளர்களுக்கு மேற்படி படியை செலுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. | வழமையான கொடுப்பனவு பட்டியலில் சேர்க்கப்படாமல் காத்திருப்போர் பட்டியலில் உள்ள சிறுநீரக நோயாளிகள் உட்பட பணம் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்று திறைசேரியில் இருந்து பணத்தைப் பெறுவதற்கு அமைச்சு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. (அமைச்சரவை விஞ:ஞாபனம் மற்றும் தீர்மானத்தின் பிரதிகள் பின்னிணைப்பு இல: 01 மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது) தேசிய திட்டமிடல் திணைக்களம் பணத்தை மீள்நிரப்பு செய்வதை கையாண்டிருந்ததால், அந்தத் திணைக்களத்திடம் மேலதிக விரங்கள் கேட்கப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட செலவினங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | காத்திருப்போர் பட்டியலில் உள்ள 13849 சிறுநீரக நோயாளர்களுக்கு 4 மாதங்களில் ரூபா 276.98 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்த தொகை சரியான சிறுநீரக நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை நடைமுறையில் இருந்ததற்கான எந்தவொரு சான்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 1/2025 ஆம் இலக்க சமூக சேவைகள் அமைச்சின் சுற்றறிக்கையின் (பின்னிணைப்பு இல.: 02) கீழ் சிறுநீரக படிகளிற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் செயன்முறையின் போது மருத்துவ அறிக்கைகள், குறைந்த வருமானம் பெறும் குடும்ப உறுப்பினராக கிராம உத்தியோகத்தரின் பரிந்துரைகள் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தரின் பரிந்துரை என்பனவற்றுடனான சிறுநீரக நோயாளர்களின் விண்ணப்பங்களைக் கருத்தில் கொண்டு படிகளுக்கு பிரதேச செயலாளர் அங்கீகாரத்தை வழங்குகிறார். அவர்களின் விபரங்கள் (இடமாற்றங்கள், இறப்புக்கள் போன்றன) சமூக சேவை உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலகங்களால் நாளதுவரையாக்கப்படுகின்றன. எனவே நோயாளர்களின் விண்ணப்பங்கள், மருத்துவ அறிக்கைகள் என சகல பதிவேடுகளும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களினால் பேணப்படுகின்றன. | கொடுப்பனவுகளின் சரியான தன்மையை சரிபார்ப்பதற்கு தேவையான அனைத்து சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

பிரதேச செயலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கைக்கு இணங்க, ஊனமுற்றோருக்கான தேசிய மன்றம் மாவட்டச் செயலகங்களுக்கான ஒதுக்கீடுகளை வழங்குவதற்கான பட்டியலைத் தயாரித்து, அந்தச் செயலகத்தின் பரிந்துரையின் அடிப்படையில், இந்த அமைச்சின் கணக்குப் பிரிவு மாவட்டச் செயலகங்களுக்கு ஒதுக்கீடுகளை விடுவிக்கிறது.